**துணை ஆணையர் (மாவ), சரகம்-XI அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. அ.ஜெயசாந்தி,**
**இடம்: 3ம் தளம், ஒருங்கிணைந்த மாநில வரி கட்டிடம்,**
**வரதராஜபுரம், சென்னை - 600 123.**

---

ந.க. 2057 / 2018 /அ1 நாள் .07.02.2020

பொருள்- பணியமைப்பு - வணிக வரித்துறை - துணை ஆணையர்(மாவ) அலுவலகம், சரகம்- XI - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் - நேரடி பணி நியமனம் - தொகுதி - II A /2017-18 (நேர்முகத்தேர்வு அல்லாத) தேர்வின்மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர் திருமதி. கு. சாந்தி - பணிவரன்முறை ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை-
1. செயலாளர், தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.6023-PSD-D/2018, நாள் 29.12.2018.
2. இணை ஆணையர் (மாவ), சென்னை (தெற்கு)கோட்டம், சென்னை-6அவர்களின் ந.க.5394/2018/அ2, நாள் 11.01.2019
3. துணை ஆணையர் (மாவ), சரகம்-XI, அவர்களின் ந.க.2057/2018/ அ1, நாள் 21.01.2019

********

ஆணை

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால், தொகுதி - II A / 2017-18 (நேர்முகத்தேர்வு அல்லாத) தேர்வு மூலம் உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 1 மற்றும் 2-ல் காணும் ஆணைகளின் வாயிலாக இச்சரகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3ல் காணும் ஆணையின்படி உதவி ஆணையர்(மாவ), கோயம்பேடு வரி விதிப்பு வட்ட அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்ட திருமதி. கு.சாந்தி என்பவருக்கு தனியாளர் பணியில் சேர்ந்த நாளான 25.01.2019 முற்பகல் முதல் உதவியாளர் பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது..

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டுகளுக்குட்பட்ட தொடர்ச்சியான ஈராண்டு காலம் தகுதி காண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது. இக்காலத்தில் தனியாளர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு, பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இந்த பணிவரன்முறை ஆணையானது இப்பதவிகள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்களின் மீதான தீர்ப்பினைப் பொறுத்து மாறுதலுக்குட்பட்டது.

ஓம்./-அ. ஜெயசாந்தி,
துணை ஆணையர் (மாவ),
சரகம் - XI, சென்னை-123

பெறுநர்

திருமதி. கு. சாந்தி, உதவியாளர்
(உதவி ஆணையர் (மாவ), கோயம்பேடு வரி விதிப்பு வட்டம் அவர்களின் மூலமாக)

நகல் - இணை ஆணையர் (மாவ), சென்னை (தெற்கு) கோட்டம்,
அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

//உண்மை நகல்//

மேலாளர்